# உதயபுரம்



திக்குவல்லை கமால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயபுரம்

ஆக்கியோன்

**திக்குவல்லை கமால்**

சித்திரங்கள்

**புஷ்பா**


வெளியீடு

**சர்வோதய சாந்தி சேனா இயக்கம்**

72/5, ராவத்தாவத்தை வீதி,
மொறட்டுவ.

அனுசரணை

**அவுஸ்திரேலிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (Aus AID)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு - 2005

நிலையான சமாதானத்திற்காக பல்வேறு இன சிறுவர்களுக்கிடையில் சிறந்த மனப்பாங்கினை விருத்தி செய்யும் நோக்குடன் அவுஸ்திரேலிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் (Aus AID) அனுசரணையுடன் சர்வோதய சாந்தி சேனா இயக்கம் 2005 ஆம் வருடத்தில் நாடு பூராகவும் நடாத்திய சிறுவர்கதை ஆக்கப் போட்டியில் தமிழ்மொழியில் **மூன்றாம்** இடத்தைப் பெற்ற **உதயபுரம்** எனும் ஆக்கம் இலங்கை சிறுவர் பரம்பரையின் பயன்பாட்டிற்கென வெளியிடப்படுகிறது.

சர்வோதய சாந்தி சேனா இயக்கம்
72/5, ராவத்தாவத்தை வீதி,
மொறட்டுவ.

Sarvodaya Shanthisena in collaboration with Australian Government (Aus AID) that conducted a project to foster the ushering of a lasting peace in Sri Lanka by encouraging friendly attitudes among children in 2005 culminated the programme with an island wide competition on writing of children's story books. The entry that won the **3rd Place** being **Uthaya Puram** is published for the use of children of Sri Lanka.


Sarvodaya Shanti Sena
72/5, Rawatawatte Road,
Moratuwa.

பதிப்பு

சிறிகத்த பிரிண்ரேர்ஸ் அன்ட் இன்டஸ்றீஸ்
40, அந்திரிஸ் சில்வா மாவத்தை, ராவத்தாவத்தை, மொறட்டுவ.

ISBN 955-559-417-X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாளைய நம்பிக்கைகள்

அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே "உதயபுரம்" என்ற இந்தக் கதைப் புத்தகம் மூலம் உங்களையெல்லாம் சந்திப்பதில் மிக்கவும் மகிழ்ச்சி.

இன்றைய சிறார்களாகிய நீங்கள் நாளைய தலைவர்கள். இந்த நாடு மட்டுமல்ல, இந்த நானிலமே உங்கது கைகளில்தான் தங்கியிருக்கிறது. எதிர்கால உலகுக்கு எல்லாவகையிலும் பொருத்தப்பாடுள்ளவர்களாக நீங்கள் வளரவேண்டும். மலரவேண்டும்.

இந்து சமுத்திரத்தின் முத்து என்று எமது நாடு சொல்லப்படுகிறது. முத்தான இந்த நாட்டிலே பல இன, பல மத, பல மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர்.

இந்த வேறுபாடுகளை சரியான முறையில் புரிந்து கொள்ளவேண்டும். இல்லாவிடத்து அது பகைமையாக வளரக்கூடிய வாய்ப்புண்டு. உண்மையில் யதார்த்தமும் அதுதான்.

நாம் சண்டைபிடித்து பரஸ்பரம் அழிந்து கொள்ளவதில் யாருக்கும் இலாபமில்லை. இயற்கையே எங்கள் அனைவருக்கும் பொது எதிரியாக பொங்கி எழுந்துவிட்ட சந்தர்ப்பத்தைக்கூட நாங்கள் சந்தித்து விட்டோம்.

நாம் ஒன்றுபடுவோம். உண்மையாகவும் உண்மைக்காகவும் வாழ்வோம். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்போம். உதவி செய்வோம். உரிமைளை மதிப்போம். வளங்களை பகிர்வோம். அன்பும் ஆத்ம பலமும் கொண்ட புத்துலகைக் கட்டடியெழுப்புவோம்.

அதற்கு "உதயபுரம்" ஒரு துளி அளவாவது உதவும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

மேலும் -

இந்த கதைப்புத்தகத்தை தெரிவுசெய்து பரிசு வழங்கி, நுலாக வெளியிடும் சாந்தி சேனா சங்கத்திற்கும் அட்டைப்படம் மற்றும் சித்திரங்கள் வரைந்துதவிய ஓவியர் புஷ்பாவிற்கும் மிக்க நன்றி.

**திக்குவல்லை கமால்**
10.06.2005

104, அத்துளுகம,
பண்டாரகம.
038-2292118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## உதயபுரம்

ஒன்றாய் ஆடுவோம் - நாங்கள்
ஒன்றாய்ப் பாடுவோம் !
அன்பாய் வாழுவோம் - உலகை
என்றும் ஆளுவோம் !

உதயபுரம் நலன்புரி நிலையம் சிறார்களின் கலகலப்பால் உயிர்பெற்றது.

ஒன்றாகப் பாடினார்கள். அதற்கேற்ப ஒன்றாக ஆடினார்கள். இராகத்துடனும் தாளத்துடனும் இரண்டு அக்காமார் அவர்களோடு பாடினார்கள்.

அதைத் தொடர்ந்து விளையாட்டு ஆரம்பமாகியது. வட்ட வடிவமாக நின்றார்கள். மத்தியிலே ஆணும் பெண்ணுமாய் இரு வெளிநாட்டவர்கள். சிவந்த நிறந்தவர்கள்.

கை தட்டினார்கள். கால்களை வல இடப் பக்கமாக அசைத்தார்கள். கைகளை உயர்த்தினார்கள். வட்டமாக ஓடினார்கள். சிறுவர்களும் அதே போன்று செய்தார்கள்.

இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்து இரசித்துக்கொண்டிருந்தான் சஞ்சயன். அவனுக்கும் அவர்களோடு சேர்ந்து பாட வேண்டும் விளையாட வேண்டும் போலிருந்தது.

அவனுக்கு பாடசாலைதான் ஞாபகம் வந்தது. காலையில் எல்லோரும் உடற்பயிற்சியில் ஈடுபடுவார்கள். ஆனால் அங்கே எல்லாம் வெள்ளைச் சீருடை. இங்கே ஆளுக்கொரு உடை. பல்வேறு நிறங்கள். இருந்தும் வண்ணத்துப் பூச்சிகளைப் போல் ஓர் அழகும் தெரிந்தது.

பெற்றோர்களும் இக்காட்சிகளைப் பார்த்தவண்ணமிருந்தனர். சோகம் நிறைந்த முகங்களிலே கொஞ்சம் மகிழ்ச்சி படர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பகுதியிலே தற்காலிகமாக பல கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அடிக்கடி வாகனங்கள் வந்துபோயின. பலவிதமான உதவிகளையும் செய்தனர். அமைச்சர்களும் அதிகாரிகளும் அடிக்கடி வந்து விசாரித்தனர். ஆறுதல் கூறினர். பாதுகாப்பு வழங்கினர்.

மெல்ல மெல்ல இருள் பரவிக்கொண்டிருந்தது.

சஞ்சயன் இங்கிருந்து வெளியேறி தனது வீட்டை நோக்கி நடந்தான்.

ஆனால் அந்த நினைவிலிருந்து அவனால் விடுபட முடியவில்லை. அவனுக்கு அங்கே பல நண்பர்கள் அறிமுகமாகிக்கொண்டிருந்தனர். அவர்களது பாடல் அவனது செவியிலே எதிரொலித்தது.

ஒன்றாய் ஆடுவோம் -நாங்கள்
ஒன்றாய்ப் பாடுவோம்
அன்பாய் வாழுவோம் - உலகை
என்றும் ஆளுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

ஆலயமணி ஒலித்தது அதிகாலைக் குளிர் எவரையும் பாதிக்கவில்லைப் போலும்.

கோயிலை நோக்கி இப்பொழுதுதெல்லாம் பக்தர்களுக்கு குறைவில்லை.

குருதேவா தனது ஆச்சிரமத்தில் அமைதியாக வீற்றிருந்தார்.

அவரது அறிவும் ஆன்மீகத் தெளிவும் ஞானப் பழமாய் அவரைப் பிரகாசிக்கச் செய்தது.

"வணக்கம் குருதேவா"

சஞ்சயனும் அவனது நண்பர்களும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

அன்பும் அமைதியும் நிறைந்த உலகத்தை குருதேவா வேண்டி நின்றார். அதற்கான வித்துக்களாக சிறார்களை வழிநடாத்தினார்.

"பிள்ளைகளே என்ன சங்கதி?" ஆவலோடு கேட்டார்.

"கடற்கோளினால் பாதிக்கப்பட்டவர்கள் எங்கள் கிராமத்துக்கும் வந்துள்ளார்கள். அவர்களுக்காக முகாம் அமைத்திருக்கிறார்கள்." சஞ்சயன் சொன்னான்.

"அறிவேன் அறிவேன். கடவுளின் சோதனை வரும் போது எல்லோரும் தான் அதற்கு ஆளாகிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் பாவம். அவர்களுக்கு எல்லோரும் உதவ வேண்டும்." குருதேவா சொன்னார்.

அவர்களுக்கு தெளிவு ஏற்படவில்லை. ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளைகளே இயற்கையோடு மனிதன் மோதிக்கொள்ளத் தொடங்கிவிட்டான். நீதி நியாயம் செத்துவிட்டது. உண்மை சொல்வாரில்லை. பணம், பொருள் குவிப்பதே முக்கியமாகிவிட்டது. பேதங்கள் மலிந்துவிட்டன. மொத்தத்தில் கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்பதையே மறந்து விட்டார்கள். இதன் விளைவு தான் இது".

சிறார்களுக்கு இப்பொழுது தெளிவு பிறந்துவிட்டது.

"இந்த உலகத்தை மாற்றியமைக்க வேண்டும் குருதேவா" சஞ்சயன் மிகத் தெளிவாகச் சொன்னான்.

"அதற்கு என்றும் என் ஆசீர்வாதம்."

இதற்குமேல் அவர்கள் அங்கே இருக்கவில்லை. குருதேவா தியானிக்கும் நேரம் வந்து விட்டதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

நடந்த சம்பவங்கள் சுனிலுக்கு ஒரு கனவுபோலிருந்தது கடலோரக்கிராமத்தில் அவனும் அவனது தாயாரும் வாழ்ந்துவந்தார்கள்.

அன்று அவன் காலையிலே எழுந்து விட்டான் ஒன்பது மணி நெருங்கும் போது காலைச்சாப்பாடும் உண்டுவிட்டான். அவனது தாயார் துணிதுவைப்பதில் ஈடுபட்டிருந்தாள்.

"கடல் வருகிறது ஓடுங்கோ..... ஓடுங்கோ" இப்படிக் கத்தியபடி எல்லோரும் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

"கடல் எப்படி வரும் ?" இப்படி விளக்கம் கேட்பதற்கிடையில்......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓடு தம்பி" என்று அவனது அம்மா அவசரப்பட அவனும் ஓடினான்.

ஓடிக் களைத்து எதிர்ப்பட்ட மாடிக் கட்டிடத்தில் ஏறிக்கொண்டார்கள்.

சுமார் ஐநூறு மீற்றருக்கு அப்பாலும் கடல் ஐந்தாறடி உயரத்துக்கு வரத்தான் செய்தது.

தண்ணீர் வடிந்தும் அரை மணி நேரத்துக்குமேல் எவரும் இறங்கவில்லை.

இனி ஆபத்தில்லை என்ற நிலையில் இறங்கி வீட்டுப் பக்கம் போனபோது வெறுந் தரையைத்தான் அவர்களால் பார்க்க முடிந்தது. இடையிலே உயிரற்ற உடல்கள் ஏராளம்.

ஐந்தே நிமிடத்துக்குள் உடுத்த உடையைத் தவிர எதுவுமற்ற அபலைகளாக மாறினர் அப்பிராந்திய வாசிகள்.

"எல்லோரும் போய் லொறியில் ஏறுங்கோ."

பெண்களையும் பிள்ளைகளையும் வாகனங்களில் ஏற்றினார்கள். அதற்கிடையில் பொலிசாரும் தொண்டர்களும் வந்து சேர்ந்தனர்.

பத்து கீலோமீற்றர் உள்ளே உதயபுரம் கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்கள்

சின்ன வயதில் சுனிலுக்கு இரண்டாவது அதிர்வு.

ஐந்து வருடங்களுக்கு முன்பு

அதுவும் ஒரு காலைப்பொழுது

சுனிலின் தந்தை ஓர் இராணுவ வீரன்.

அவனது பிரேதப் பெட்டி சகல மரியாதைகளோடும் வந்து சேர்ந்தது.

இதை எவருமே எதிர்பார்க்கவில்லை. வீட்டாரின் ஒப்பாரி வானைத் தொட்டது.

விடுதலைப் போராளிகளால் இராணுவ முகாம் தாக்கப்பட்டதன் விளைவு இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனில் அதிர்ந்து போனான்.

தன்னுடைய தகப்பன் ஏன் கொல்லப்பட்டார் என்று அவன் சிந்திக்கத் தொடங்கினான்.

ஒருவரை ஒருவர் சுட்டுக்கொள்வதை அந்தப் பிஞ்சு மனம் ஏற்கமறுத்தது.

தாயும் மகனும் தனித்தே வாழ்ந்து வந்தார்கள். அந்த வீட்டையும் சுனாமி காவு கொண்டுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

புத்தாண்டில் சஞ்சயன் ஒன்பதாம் தரத்திற்கு சித்தியடைந்திருந்தான். புது வகுப்பு, புது ஆசிரியர்கள், புதிய ஆரவாரம் என்றெல்லாம் ஒரு மாத மாக கற்பனை பண்ணினான்.

இன்று முதல் நாளாக பாடசாலை சென்றபோது எல்லாம் சோபை இழந்து காணப்பட்டது.

சுனாமியில் உயிரிழந்தவர்களுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலியோடு தான் பாடசாலை ஆரம்பமாகியது. அதிபர் இந்த அனர்த்தம் சம்பந்தமாக விளக்கமளித்தார். நூற்றுக்கணக்கான மாணவர்கள் பலியாகியுள்ள விபரம் கேட்டு பலர் கண்ணீர் சொரிந்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவும் திட்டம் வகுக்கப்பபட்டது. சஞ்சயன் நண்பர்களோடு அதில் மும்முரமாக ஈடுபட முடிவு செய்தான். அதற்காக வீடு வீடாகச் செல்லும் நேரம்வரை காத்திருந்தான்.

“என்ன சஞ்சயன் சோர்ந்து போனபடி? ” அவனது தயார் கேட்டார்.

“ஆயிரக்கணக்கான மக்கள் கஷ்டத்துக்குள்ளாகிவிட்டார்கள்...... அம்மா இவர்களுக்காக ஏதாவது செய்யவேண்டும்.”

“உன்னுடைய அப்பாவும் அப்படித்தான் சொன்னார். அதற்காகத்தான் உழைத்தார். வீட்டைப்பற்றி அவர் யோசிக்கவில்லை. கடைசியில் அவரும் இறந்துபோய்விட்டார்.” அவள் கண் கலங்கியபடி சொன்னாள்.

“நீங்கள் கவலைப்படாதீர்கள் அம்மா நான் வளர்ந்ததும் உங்கள் கஷ்டங்கள் தீர்ந்துபோகும். மற்றவர்களுக்கும் நான் முடிந்தளவு உதவி செய்வேன்.” பெரிய மனிதனைப் போல் சஞ்சயன் சொன்னான்.

அவள் தன் மகனை வாரி அணைத்துக்கொண்டாள். மகனின் வயதுக்கு மீறிய ஆற்றலை எண்ணி கண்ணீர் சிந்தினாள்.

“ஏனம்மா அழுகிறீர்கள்? ”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உங்கப்பா கடைசியாகச் சொன்னதை நினைத்துத்தான்.....”

“அப்படி என்னம்மா சொன்னார். ? ”

“என்ன கஷ்டப்பட்டாயினும் பாடசாலைக் கல்வியையும் அறநெறிக் கல்வியையும் தவறாமல் கொடுக்கச் சொன்னார்.”

“அப்பாவுடைய எதிர்பார்ப்பை நான் நிச்சயமா நிறைவேற்றுவேன் அம்மா.” துள்ளியெழுந்து சொன்னான் சஞ்சயன் .

அவன் கண்களில் ஒரு கூர்மை பளீரிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

உதயபுரம் நலன்புரி முகாம் அன்று கலகலத்தது சாந்தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டான். தேவாரம் பாடி மனநிறைவு கொண்டான். அவனது நெற்றியிலே திருநீறு பளிச்சிட்டது.

" வணக்கம் "
" ஆயுபோவன் "
" அஸ்ஸலாமு அலைக்கும் "

சாந்தனுக்கு இப்போது இங்கே எத்தனை நண்பர்கள். சிங்களத்தில் கூட நாலைந்து வார்த்தைகள் சொல்லப்பழகிவிட்டான்.

ஊரிலே அக்கம் பக்கத்திலே பெரியபெரிய வீடுகள் இருந்தன. இப்படியொரு நெருக்கத்தை அவன் காணவில்லை. இங்கே பல வசதியீனங்களோடு வாழ்ந்த போதும் ஒரு வித பிணைப்பைக் காணமுடிந்தது. மொத்தத்தில் ஒரு குடும்பம் போன்ற உறவு .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தன் முகாமின் எல்லைக்கே வந்துவிட்டான். பற்றைக்காடு பரந்து தெரிந்தது. தூரத்தில் சின்னச்சின்ன ஓலை வீடுகள். ஆங்காங்கே நடமாடும் மனிதர்கள்.

கொஞ்சம் அமர்ந்து கொண்டால் நல்லது போல் பட்டது அவனுக்கு. அவனது கண்களிலே அந்தப் பாராங்கல் தெரிந்தது. அதிலே ஏறி அமர்ந்து கொண்டான்.

'ஐயோ நினைத்துக்கூடப் பார்க்காத ஓர் இடத்துக்கு வந்திருக்கிறோமே' என்று ஒரு கணம் கலங்கினான்.

இடப்பெயர்வு அவனது தலைவிதியாக அமைந்துவிட்டதோ என்னவோ!

வடபகுதிக் கிராமமொன்றில் பிறந்து வளர்ந்தவன் அவன்.

யுத்தக் கொடுமையால் பள்ளிப்படிப்புக்கூட அவனுக்கு ஒழுங்காகக் கிட்டவில்லை.

சின்ன வயதில் விளையாட்டு விமானங்களோடு அவன் விளையாடியதில்லை. ஏனென்றால் அவனது வாழ்வோடு உண்மை விமானங்கள் விளையாடிக்கொண்டிருந்தன.

ஒரு காலை வேளையில் சந்தைக்குச் சென்ற அப்பா செல் விழுந்து செத்துப் போனார்.

அவனையும் தங்கையையும் வளர்க்க அம்மா என்னபாடுபட்டிருப்பாள் என்பதை அவனால் ஊகிக்க முடியவில்லை.

இன்னும் சில காலத்தின் பின் வீடே தரைமட்டாகிவிட்டது.

அங்கிருந்து ஊரே இடம்பெயர்ந்தது. எத்தனை இடங்களில் குந்தி எழுந்தாகி விட்டது.

கடைசி இருப்பிடத்தையும் ஒரே தங்கையையும் சுனாமி கொண்டுபோய்விட்டது.

"சாந்தன்"

அவனது தனிமையை அந்த குரல் கலைத்தது.

அங்கே நாலைந்து நண்பர்கள். சஞ்யனும் கூடத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

சுஜிதா தேடிவரும்போது ஃபாதிமா துண்டு விரித்துத் தொழுது கொண்டிருந்தாள்.

அவளது முகமும் இருமணிக்கட்டுகளும் மாத்திரமே வெளித் தெரிந்தன.


இந்தக் காட்சியை சுஜிதா மட்டுமல்ல அங்கிருந்த பலரும் பார்க்கவே செய்தனர்.

தொழுது முடிந்து அவள் கையுயர்த்திப் பிரார்த்தனை செய்தாள்.

தோழிகளாகிவிட்ட சுஜிதாவும் ஃபாதிமாவும் இங்கு வருமுன்பு ஒருவரையொருவர் அறிந்தவர்களல்லர்.

இருவருமே ஒன்பதாம் தரத்திற்கு சித்தியடைந்திருந்தார்கள். அவர்களது கனவுகள் கடலலைகளோடு கலந்துவிட்டன.

ஃபாதிமா பிறந்து இருபத்தேழே நாளில் பிறந்த மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்டவள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவிலும் இருளிலும் லொறியிலும் டிடாக்டரிலுமாய் பல்லாயிரம் சனத்தோடு சனமாய் அவளது உம்மா அவளைச் சுமந்து கொண்டுவந்திருந்தாள். அகதிமுகாமே அவளது தொட்டில். அது இன்றுவரை தொடர்கிறது.

"ஃபாதிமா உங்களுக்கு அண்ணன் தம்பிமார் யாருமில்லையா?" சுஜிதா கேட்டாள்.

"நான் மாத்திரம் தான்" - கண்கள் கலங்க அவள் சொன்னாள்.

இருவரது அம்மாமாரும் இன்று அவர்களோடு இல்லை. சுனாமியோடு போய் விட்டார்கள்.

"அங்க குமாரி போகப் போறா .... ஓடிவாருங்கள்."

இருவரும் எழுந்து ஓடினார்கள் . அங்கே இன்னும் பலர் மொய்த்து நின்றனர்.

குமாரி பத்துவயது மதிக்கத்தக்கவள். குறிப்பிட்ட வேளையில் பிரத்தியேக வகுப்புக்கு சென்றிருந்ததால் அவள் மாத்திரமே தப்பியிருந்தாள்.

அழகிய புதுக்கார் ஒன்று வந்திருந்தது. அவர்கள் எல்லாப் பிள்ளைகளுக்குமே சொக்லட் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

குமாரியின் சிறிய தந்தையும் அவரது மனைவியுமே அவர்கள். மலையகப் பிரதேசத்திலிருந்து தேடிக்கொண்டு வந்திருந்தார்கள்.

எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு கடைசியாக சுஜிதாவும் ஃபாதிமாவும் நின்ற இடத்துக்கு வந்தாள்.

இருவரையும் கட்டிப்பிடித்துக் கொண்டு குமுறிக்குமுறி அழுதாள். கூடவே அவர்களும் அழுதார்கள்.

என்ன செய்வது? அவள் போய்த்தானாக வேண்டும். இப்படி ஒவ்வொரு நாளும் ஒருவரோ இருவரோ போவது சாதாரணமாகிவிட்டது.

குமாரியை சுமந்து கொண்டு அந்தக் கார் புறப்பட்டது.

அது கண்களிலிருந்து மறையும் வரை எவருமே இடம் விட்டு நகரவில்லை .

இந்த சின்ன சுனாமியிலிருந்து சுஜிதாவாலும் ஃபாதிமாவாலும் விடுபடமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

ஆன்மீகக் கல்வி பெற சஞ்சயன் வழமை போல் குருதேவாவிடம் சென்றான். அவர் எங்கோ வெளிச்செல்ல தயாராகி நின்றார்.

"எங்கே பயணம் குருதேவா ? "

"நீ வரும் வரையில் தான் காத்திருந்தேன்."

"அப்படியா ...சொல்லுங்கள் குருதேவா."

"நலன்புரி நிலையத்தில் சமயவேளை நடாத்துகிறார்களாம். எனக்கு அழைப்புத் தந்துள்ளார்கள்."

சஞ்சயனுக்கு புது உற்சாகம் பிறந்து விட்டது.

"சரி போவோம் குருதேவா."

இருவரும் வெளியேறினார்கள். இடையிலே இன்னும் பலரும் இணைந்து கொண்டார்கள்.

முகாம் சுறுசுறுப்பாகவிருந்தது.

பிரத்தியேக எற்பாடுகள்.

விரிப்பில் சகலரும் அமர்ந்திருந்தனர். சிறுவர்களுக்கு முன்பக்கமாக இட ஒதுக்கீடு.

பௌத்த தேரர், அருட்சகோதரர், மௌலவி அப்படி அருகருகே அமர்ந்திருந்தார்கள். குருதேவாவையும் வரவேற்று அமரச் செய்தார்கள்.

"புத்தங் சரணம் கச்சாமி" என்று சொல்லி தேரர் தனது பேச்சை ஆரம்பித்தார்.

"நாங்கள் பெரும் இழப்புகளுக்கு ஆளாகியிருக்கிறோம். அதே நேரத்தில் எங்களிடையே ஒரு அன்பு ஏற்பட்டிருக்கிறது. உதவி செய்யும் எண்ணம் வளர்ந்திருக்கிறது. குரோதங்களையும் கோபங்களையும் மறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டோம். எமக்குள் இனி எந்தப் பேதமும் வேண்டாம். ஒரு தாய் மக்களாய் வாழ்வோம்." இந்தப்பாங்கில் தேரரின் பேச்சுத் தொடர்ந்தது.

ஏனைய மதப்பெரியார்களும் மனிதாபிமானம், கருணை, சகோதரத்துவம், புரிந்துணர்வு பற்றியெல்லாம் எடுத்துரைத்தார்கள்.

தொடர்ந்து குழுக்குழுவாகவும் தனிப்பட்ட முறையிலும் ஆறுதல் கூறும் வகையில் கலந்துரையாடினார்கள்.

இறைவனின் சோதனையை பொறுமையோடும் நம்பிக்கையோடும் எதிர்கொள்ளவேண்டும். அப்போதுதான் கடவுளின் அன்பைப் பெறமுடியுமென்று தெளிவுபடுத்தினார்கள்.

எல்லோருக்கும் இனிப்பும் பானமும் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சி முடிவுறும் போது எல்லோர் முகத்திலும் அலாதியான மகிழ்ச்சி படர்ந்திருந்தது.

சிறுவர்கள் மத்தியிலே சஞ்சயனும் வீற்றிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

உதயபுரம் பாடசாலையில் அன்று முப்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் புதிதாகச் சேரும் ஏற்பாடு.

அதிபரும் ஆசிரியர்களும் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். முகாம் சார்ந்த சில அதிகாரிகளும் வந்திருந்தனர்.

சஞ்சயனுக்கு சொல்லமுடியாத மகிழ்ச்சி . அவனது வகுப்புக்குத்தான் சாந்தன், ஃபாதிமா, சுஜிதா போன்றவர்களும் சேர்கின்றனர்.

இதனையொட்டி சிறியதொரு வைபவம் இடம்பெற்றது.

அந்தப் பாடசாலையில் ஒன்பதாம் தரம் வரையில் மாத்திரமே வகுப்புக்கள் இருந்தன.

"இந்த மாணவர்கள் கல்வி கற்க தேவையான அனைத்தையும் இப்பாடசாலை மாணவர்களே சேகரித்தனர். எனவே இந்த விநியோகத்தை எமது மாணவர் தலைவன் சஞ்சயன் ஆரம்பித்து வைப்பார்."

அதிபர் இவ்வாறு சொன்னபோது மாணவர்கள், ஆசிரியர்கள், முகாம் சார் பெற்றோர் அனைவரும் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

சஞ்சயன் ஒவ்வொரு மாணவருக்கும் ஒவ்வொரு பொதியாக வழங்க ஆரம்பித்தான்.

திடிரென்று ஒர் அழுகுரல்

"சுஜிதாதான்."

பலரும் அவளைச் சூழ்ந்து என்னவென்று விசாரித்தார்கள்.

"என்ர பாடசாலை..... டீச்சர்மார்... நண்பர்களுக்கெல்லாம் என்ன நடந்ததோ தெரியல்ல" அவளால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அதிபர் வந்து தலையைத் தடவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்கச்சி..... உங்கள் பாடசாலை அப்படியே இருக்கும். ஆசிரியர்கள் பிள்ளைகளெல்லாம் இருப்பார்கள்..... ம்..... இங்கே தற்காலிகமாகத்தான் படிக்கப்போறீர்கள். எல்லாம் சரியாக வந்தபிறகு அங்கேயே போகலாம்....... அதுவரையில் நாம் எல்லாம் பார்த்துக்கொள்ளுவோம்."

அதிபரின் ஆறுதல்மொழி சுஜிதாவுக்குத் தெம்பாக இருந்தது.

ஃபாதிமா அவளை அழைத்துக்கொண்டு வகுப்புக்குச் சென்றாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

அன்று விடுமுறைநாள். சஞ்சயன் காட்டுக்குப் புறப்பட்டான்.


ஒரு வாரத்துக்குப் போதுமான விறகைக் கொண்டுவந்து சேர்த்தால்தான் அவனுக்கு நிம்மதி. சிலவேளை காட்டுப் பழங்களும் கொண்டுவந்து சேர்ப்பான்.

அவனும் அம்மாவும் ஒரு குச்சில் வீட்டில் தான் வாழ்ந்து வந்தார்கள். வீட்டைச் சுற்றி மா, பலா, வாழை மரங்கள் நின்றன. காய்கறிகளும் போதுமாக விளைந்திருந்தன.

அன்று சற்று வித்தியாசமான பக்கத்தால் காட்டுக்குச் சென்றான். கோடரி கழுத்திலே தொங்கியது. இடுப்பிலே கத்தி.

பெருமரங்கள் நிறைந்த சோலைக்குள் அவன் பிரவேசித்தான். குருவிகள் கீச்சிட்டன. இன்னும் சில பறவைகள் சடசடத்துப் பறந்தன. குரங்குகள் மரத்துக்கு மரம் தாவின. மெல்லிய இருள் படர்ந்திருந்தது. சூரியனை மேகக் கூட்டம் மறைத்திருந்தது.

திரும்பிப் பார்த்தான் சஞ்சயன். காடு நீண்டு தெரிந்தது. இவ்வளவு தூரம் வந்துவிட்டேனா என்று அதிசயித்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஹ் ஹ் ஹா .........”

இந்தக் காட்டுக்குள் யாருடைய சிரிப்பு இது? அங்கே ஒரு முனிவர் ஆலமர நிழலில் அமர்ந்திருந்தார்.

நீண்ட தாடி, நெற்றியிலே வெண்ணிறக் கோடுகள், கழுத்திலே உருத்திராட்ச மாலை.

“தம்பி இங்கே வாரும்.”

சஞ்சயன் அருகே போய் நின்றான்.

“உனக்கு இங்கு என்ன வேலை? ”

“நான் விறகு பொறுக்குவதற்காக வந்தேன் சாமி.”

“விறகு பொறுக்கி என்ன செய்வாய் ? ”

“எனது தாயாருக்கு சமையல் வேலைக்காகக் கொண்டுபோய்க் கொடுப்பேன்.”

“மற்ற நேரங்களில்........”

“படிக்கிறேன் . மற்றவர்களுக்கு உதவி செய்கிறேன்.”

“சபாஷ்...... உன்னிடம் நிறையப் பணம் இருந்தால் என்ன செய்வாய்?”

“அதனைக் கொண்டு மக்களின் கஷ்டத்தை நீக்குவேன். நீதி நியாயத்தை நிலைநாட்ட அர்ப்பணிப்பேன்.”

“உன்னுடைய நல்லெண்ணத்தை வரவேற்கிறேன். இவற்றை நடைமுறைப்படுத்த உனக்கு நான் வழிகாட்டுவேன். ஆனால் ஒன்று........”

“சொல்லுங்கள் சுவாமி.”

“முதலில் உனக்கொரு பரீட்சை வைப்பேன். அதில் நீ சித்தியடைய வேண்டும்.”

“எந்தப் பரீட்சைக்கும் நான் தயாராகவே இருக்கிறேன்.”

“அப்படியா ? பிடி...... இது ஒரு தங்க முட்டை. இதை எடுத்துக் கொண்டு இந்த ஒற்றையடிப் பாதை வழியே செல். அது மீண்டும் இதே இடத்தைத்தான் வந்து சேர்கிறது.”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இடையில் காட்டு மிருகங்கள்.”

“நான் கவனித்துக் கொண்டுதான் இருப்பேன். பயப்படாமல் போ.”

சஞ்சயன் முட்டையும் கையுமாகப் பயணத்தைத் தொடர்ந்தான்.

முதலில் ஒரு நரி அவனுக்கு எதிர்ப்பட்டது.

“உன்கையிலுள்ள தங்க முட்டையை எனக்குத்தா. நான் இரண்டு முட்டைகள் உனக்குத் தருகிறேன்.” என்று கேட்டது.

‘ஒன்றை நான் எடுத்துக் கொண்டு அடுத்ததை முனிவரிடம் கொடுத்து விடலாமே.... சீச்சீ வேண்டாம். என்று அவன் மனம் சொன்னது.’

“மன்னிக்க வேண்டும் நரியாரே” என்று சொல்லிவிட்டு நடையைத் தொடர்ந்தான்.

காட்டு மிருகங்களின் பெரும் சத்தம் இப்பொழுது அவனுக்குக் கேட்டது. பெருமரங்கள் மிகச் செறிவாக இப்போது காணப்பட்டன.

ஒரு கரடி முன்னே வந்தது.

“உன்கையிலுள்ள தங்க முட்டையை எனக்குத்தா. நான் மூன்று முட்டைகள் உனக்குத் தருகிறேன்.

ஆசை யாரைத்தான் விட்டது. அடுத்த கணம் தன்னை நிலை நிறுத்திக் கொண்டான் சஞ்சயன்.

“மன்னிக்க வேண்டும் கரடியாரே” என்று சொல்லிவிட்டு நடையைத் தொடர்ந்தான்.

ஒரே இரைச்சலாக இருந்தது. காட்டு மிருகங்கள் அங்கும் இங்கும் பாய்ந்தன.

ஒரு யானை அவனை எதிர்கொண்டது.

“உன் கையிலுள்ள தங்க முட்டைகளை எனக்குத் தா ? நான் ஐந்து முட்டைகள் உனக்குத் தருகிறேன்.”

“மன்னிக்க வேண்டும். என்னால் தர முடியாது.” என்றவாறு அவன் முன்னோக்கி நடந்தான்.

வெளிச்சம் பரவிக்கொண்டு வந்தது. காற்று சில்லிட்டு வீசியது. மரங்கள் ஐதாகக் காணப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாரும் வாரும்."

ஆமாம் முனிவர்தான் .

'எப்படி நான் மீண்டும் அதே இடத்துக்கு வந்தேன். ? '

முட்டை கைமாறும் போது பட்டென்று விழுந்து உடைந்தது. அவன் ஏமாற்றத்தோடு முனிவரைப் பார்த்தான்.

"கவலைப்படாதே உண்மையான தங்கமுட்டை இதோ இருக்கிறது. பரீட்சையில் நீ சித்தியடைந்துவிட்டாய். இதைவிற்று நீ சொன்ன காரியங்களைச் செய் . அந்தப் பணம் முடிந்ததும் மீண்டும் இங்கே வா. அதோ தெரிகிறதல்லவா சிவப்புப் பூக்கள் நிறைந்த மரம்? அதன் கீழே ஒரு கல் இருக்கிறது. அதன் அடியில் தங்க முட்டைகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றாக நீ தொடர்ந்து எடுக்கலாம் எப்பொழுது நீ உனக்காக அல்லது பிழையாக அந்தப் பணத்தை பயன்படுத்துகின்றாயோ அதன்பின்பு எல்லாம் கரிக்கட்டிகளாக மாறிவிடும். சரி போய் வா."

அவன் திரும்பி மூன்றடிதான் வைத்தான் .

"தம்பி இங்கே பார்."

அவன் திரும்பினான்.

அங்கே முனிவரைக் காணவில்லை. ஆனால்.....

"ஐயா...."

அவன் வணங்கி நின்றான்.

"நான் வைத்த இறுதிப் பரீட்சையிலும் நீ சித்தியடைந்து விட்டாய். என் கடைசிக்காலம் நெருங்கிவிட்டது. இனி உன் பணி தொடரட்டும். அதற்கு என் ஆசீர்வாதங்கள். போய்வா."

தங்க முட்டையோடு திரும்பி நடந்தான் சஞ்சயன்.

விறகு பொறுக்கிக் கொண்டு இனி அவன் வீட்டுக்குப் போக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

“ஆறு மாதத்துக்குள் புதுவீடு கட்டி உங்களைக் குடியமர்த்துவோம்.” மந்திரியின் வார்த்தைகள் எல்லோருக்கும் இனிமையாக இருந்தது.

சுனில், சாந்தன், பாதிமா, சுஜிதா ஒருவரையொருவர் பார்த்து கவலையில் தோய்ந்து போனார்கள்.

எங்கே? என்ற கேடகாத கேள்வி எல்லார் மனதிலும் எழுந்து நின்றது.

“எங்களுக்கு இனி யார் இருகிறார்கள்? நாங்கள் ஒரே குடும்பமாகிவிட்டோம். சகோதரர்களாகிவிட்டோம். இந்த ஊர் மக்களை பழகிவிட்டோம். நல்ல நிலமிருக்கிறது. நீர் வள மிருக்கிறது , வேர்வை சிந்தி உழைக்கலாம். எங்களை யாரும் பிரிக்க வேண்டாம்.” சாந்தனின் குரல் மிகத் தெளிவாக ஒவித்தது.

மந்திரி காதைக் கூர்மையாக்கிக் கொண்டார்.

“எங்களுக்கு இங்கேயே வீடுகட்டித்தாருங்கள்” - சுனில் அதனை ஆமோதித்துப் பேசினான்.

பெரியவர்களும் அதே கருத்தைத்தான் தெரிவித்தனர்.

“நீங்கள் விருப்பமென்றால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. வெளிநாட்டு உதவியோடு இங்கேயே கட்டித் தருகிறோம்.”

கைதட்டி ஆரவாரம் செய்து துள்ளிக்குதித்தார்கள் சிறுவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

‘எதைக் கொண்டு வந்தோம். நாம் இழப்பதற்கு’ - கீதை

‘விழுந்த இடத்திலிருந்து நம்பிக்கையோடு எழுவோம்.’

இப்படியான போஸ்டர்கள் அங்கே ஒட்டப்பட்டிருந்தன.

அங்குதான் சிறுவர் மாநாடு நடந்து கொண்டிருந்தது.
சஞ்சயன் தான் தலைவர்.

உள்ளூர் நண்பர்களும் சுனாமி நண்பர்களும் ஒன்றுகலந்திருந்தனர்.

தங்கமுட்டை விவகாரத்தை சஞ்சயன் எடுத்து விளக்கிய போது எல்லோரும் ஆச்சரியப்பட்டுப்போனார்கள்

“சஞ்சயன் ஒரு வித்தியாசமான ஆள்தான்.”





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவனுடைய இலட்சியங்களுக்கு நாங்களும் கைகொடுக்க வேண்டும்.”

நண்பர்கள் தங்களுக்குள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

சஞ்சயன் தனது எண்ணங்களை வெளிப்படுத்திப் பேசினான்.

உதயபுரத்திலிருந்து ஓர் ஆதர்ஷஉலகைக் கட்டியெழுப்ப எல்லோரும் இதயத்தில் கைவைத்து உறுதியளித்தனர்.

அந்த உறுதிமொழி இனிய பாடலாய் எங்கும் எதிரொலித்தது.

புத்தொளி புலர்ந்தது - வசந்தப்
புதுமணம் பொலிந்தது.
நித்தமும் நிலைத்திட - எமக்காய்
பூத்தது புத்துலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களின் மனது பரிசுத்தமானது. அந்த பரிசுத்தத் தன்மையைப் பாதுகாப்பது சமூகத்தின் பொறுப்பாகும். பரிசுத்த மனங்களில் சிறந்த எண்ணங்களை உருவாக்கி, சிறந்த மனப்பாங்குகளில் வளரும் பிள்ளைகள் முழு உலகிற்கும் முன்மாதிரியாகும். ஆசீர்வாதமாகும். சிறுவர்களின் மனது தவறான பாதைக்குச் சென்றால் அதன் தவறை மூத்த சமூகம் பொறுப்பேற்க வேண்டும். அந்தப் பிள்ளைகள் மூத்தோர்களிடமே உதாரணங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சிறு குழந்தைகள் பேதங்களை அறியாது. அவர்கள் பிரிவுகளை உருவாக்கும், தூரமாக்கும், உயர்வு தாழ்வு என கவனிக்கும் பிரிவினையை அறியாதவர்கள். அனைத்தையும் சமனாகச் சிந்திப்பர். சிறுவர்கள் ஒன்றாகச் சேரும்போது மகிழ்வுடனும், சந்தோசத்துடனும் இருப்பது அதனாலாகும். உலகம் அழகாவது பேதத்தைப் புறக்கணிக்கும் சமானத் தன்மையாலாகும். சிறுவர் மனது பரிசுத்தமானதாகும். சிறுவர் உலகம் மூத்தோர் எங்களுக்கு பல விடயங்களைக் கற்பிக்கின்றது. மனதால் சிறுவர் பராயத்திற்குச் சென்று இந்த உன்னத விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கு நாம் நேர்மையாக இருக்க வேண்டும்.

சிறுவர்களின் மனதுக்குக் கதைப்பது இலகுவான காரியமல்ல. சிறுவர் கதைப்புத்தக நிர்மாணிப்பாளர்கள் இந்தக் கஷ்டத்தை சிறப்பாக வெற்றி கொண்டனர். அந்த வெற்றி எங்கள் பொறுப்பாகும். சர்வோதய இயக்கம் மனித நேயம் தொடர்பான செய்தியை உள்ளங்களுக்கிடையில் கொண்டு செல்வதற்கு பாரிய முயற்சி செய்கின்றது. எங்களது கலாச்சாரத்தின் உன்னத தன்மையை அறிந்துகொண்டு எங்கள் ஒவ்வொருவருக்கிடையில் இருக்கும் இடைவெளிகளை அகற்றவேண்டும். சமாதானத்தை உருவாக்குவதற்காக என்னிடமுள்ள முயற்சிக்கு இந்தக் கதைப்புத்தகத்திற்கூடாக விடிவு ஒன்று கிடைக்குமென்பது எனது நம்பிக்கையாகும்.

*கலாநிதி ஏ.ரி. ஆரியரத்ன*
தலைவர்
சர்வோதயம்

ISBN 955-559-417-X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org